# தமிழ்நாடு மாநிலம்- பொது அறிவு கேள்வி மற்றும் பதில்கள் தமிழில்

**Q1.** வைதோரைக் கூட வையாதே-இந்த வையமுழுதும் பொய்த்தாலும் பொய்யாதே -இவ்வரியை பாடியவர் யார்?
Who sang the line - Don't even scold people who scolded you, don't lie even if the whole world lies?
(a) கடுவெளிச்சித்தர்
(b) கவிமணி
(c) திருமூலர்
(d) குடும்பை சித்தர்

**Q2.** பின்வரும் யார், தமிழ்க்கவிஞர்களின் இளவரசன் என்று புகழப்படுகிறார்?
Who among the following is hailed as the prince of Tamil poets?
(a) கண்ணதாசன்
(b) பாரதியார்
(c) திருத்தக்கதேவர்
(d) பரிதிமாற் கலைஞர்

**Q3.** 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று உழவுத்தொழிலின் சிறப்பைக் கூறியவர் யார்?
Who described the excellence of ploughing as 'Who ploughing eat their food, they truly live'?
(a) பாரதிதாசன்
(b) திருவள்ளுவர்
(c) கம்பர்
(d) பாரதியார்

**Q4.** சுந்தரரோடு தொடர்பு கொண்ட ஆழ்வார் யார்?
Who of the following Alwars was associated with Sundarar?
(a) நம்மாழ்வார்
(b) ஆண்டாள்
(c) பெரியாழ்வார்
(d) திருமங்கையாழ்வார்

**Q5.** நாட்டுப்புற இயலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
Who is known as the father of folklore?
(a) ஜேக்கப் கிரிம்
(b) மாக்ஸ் முல்லர்
(c) கி.வா.ஜகந்நாதன்
(d) ஆறு. அழகப்பன்



**Q6.** பின்வரும் நூல்களில் எது, கம்பரின் நூல்களில் ஒன்றல்ல?
Which of the following books is not one of Kambar's books?
(a) சிலையெழுபது
(b) அபிராமி அந்தாதி
(c) சரசுவதி அந்தாதி
(d) திருக்கை வழக்கம்

**Q7.** திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நூல் யாரால் இயற்றப்பட்டது?
By whom was the book, 'Thiruthondar Thiruvandadhi' written?
(a) சேக்கிழார்
(b) நம்பியாண்டார் நம்பி
(c) அரிசில் கிழார்
(d) கபிலர்

**Q8.** பின்வரும் நூல்களில் எது, சங்ககால நீதி இலக்கியங்களின் பட்டியலில் ஒன்றல்ல?
Which of the following books, does not belong to the list of books of law of the Sangam age?
(a) திரிகடுகம்
(b) ஏலாதி
(c) முதுமொழிக்காஞ்சி
(d) மேற்கூறிய எதுவும் இல்லை

**Q9.** சின்னச்சீறா என்ற இஸ்லாமிய நூலை எழுதியவர் யார்?
Who is the author of the Islamic book 'Chinnacheera'?
(a) பனு அகமது மரைக்காயர்
(b) உமறுப் புலவர்
(c) அப்துல் ரகுமான்
(d) சேக் மீரான்

**Q10.** பின்வரும் நூல்களில், குமரகுருபரர் இயற்றாத நூல் எது?
Which of the following texts was not composed by Kumaraguruparar?
(a) மதுரைக் கலம்பகம்
(b) நந்திக் கலம்பகம்
(c) கந்தர் கலிவெண்பா
(d) நீதிநெறி விளக்கம்

**Q11.** தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்பட்டவர் யார்?
Who is popularly known as the 'Wordsworth' of Tamil Nadu?
(a) சுரதா
(b) முடியரசன்
(c) வாணிதாசன்
(d) பாரதிதாசன்

**Q12.** உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் ஆசிரியர் யார்?
Who was the teacher of U.V. Swaminatha Iyer?
(a) V. கல்யாணசுந்தரம்
(b) சங்கரதாஸ் ஸ்வாமிகள்
(c) மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை
(d) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

**Q13.** "தமிழ்கெழு கூடல்" என்று புறநானூறு போற்றியது எதை?
What is it that Purananooru praised as "Tamilkezhu Koodal"?
(a) வைகை
(b) முக்கூடல்
(c) மதுரை
(d) காஞ்சி

**Q14.** அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக இருந்தவர் யார்?
Who was the minister of Arimarthana Pandian?
(a) சேக்கிழார்
(b) ஞானசம்பந்தர்
(c) மாணிக்கவாசகர்
(d) கபிலர்

**Q15.** குமரகுருபரருக்கு மீனாட்சியம்மையே சிறுமியாக வந்து எதை பரிசளித்தார்?
Coming as a child, what did Meenakshi present to Kumarakurubarar?
(a) தங்க நெல்லிக்கனி
(b) முத்துமணி மாலை
(c) தங்க நாணயங்கள்
(d) மேற்கூறிய எதுவும் இல்லை

**Q16.** 'மணநூல்' என அழைக்கப்படும் நூல் எது?
Which book is also known as 'Marriage Book'?
(a) சீவகசிந்தாமணி
(b) சிலப்பதிகாரம்
(c) வளையாபதி
(d) குண்டலகேசி

**Q17.** 'திராவிட வேதம்' என்றழைக்கப்படும் நூல் எது?
Which book is also known as 'Dravidian Veda'?
(a) திருக்கோவையார்
(b) திருவாய்மொழி
(c) நேமிநாதம்
(d) உண்மை விளக்கம்

**Q18.** 'இராமாயணத்திற்கு' கம்பர் இட்டப் பெயர் என்ன?
What is the name given by Kambar to 'Ramayana'?
(a) இராமாவதாரம்
(b) இராமாயணம்
(c) கம்பராமாயணம்
(d) இராமகாதை

**Q19.** பின்வரும் கூற்றுகளில் எது/எவை சரியானது/சரியானவை?
Which of the following statements is / are correct?
(a) மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணை என்று அழைக்கப்படும்.
(b) வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் என்று அழைக்கப்படும்.
(c) கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்று அழைக்கப்படும்.
(d) மேற்கூறிய அனைத்தும்.

**Q20.** சுரதா எழுதிய பின்வரும் நூல்களில் எது, தமிழ் வளர்ச்சித்துறை பரிசை பெற்றது?
Which of the following books written by Suratha won the Tamil Development Award?
(a) துறைமுகம்
(b) சுரதாவின் கவிதைகள்
(c) சுவரும் சுண்ணாம்பும்
(d) தேன்மழை



**Q21.** புலவரேறு என்று சிறப்பிக்கப் பெற்றவர் யார்?
Who was popularly known as Pulavareru?
(a) நாமக்கல் கவிஞர்
(b) நக்கண்ணையார்
(c) வரதநஞ்சைய பிள்ளை
(d) ராமன் பிள்ளை

**Q22.** அதியமான் நெடுமான் அஞ்சியின் அவை புலவராக திகழ்ந்தவர் யார்?
Who was the court poet of Adhiyamaan Nedumaan Anji?
(a) வெள்ளிவீதியார்
(b) ஔவையார்
(c) நக்கண்ணையார்
(d) காக்கை பாடினியார்

**Q23.** ஒகேனக்கல் அருவியின் சங்ககாலப் பெயர் என்ன?
With which name was Hogenakal falls known during the Sangam age?
(a) தகடூர் வீழ்ச்சி
(b) உகுநீர்க்கல்
(c) தலைநீர்
(d) மேற்கூறிய அனைத்தும்

**Q24.** கிறித்தவ கம்பர் என்று புகழ்பெற்றவர் யார்?
Who was popularly known as Christian Kambar?
(a) எச். ஏ. கிருஷ்ணபிள்ளை
(b) கோ.மோகனரங்கன்
(c) எல்லீஸ்
(d) ஜி.யு.போப்

**Q25.** அழுது அடியடைந்த அன்பர் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
Who was referred to as 'Azhudhu Adiyadaindha Anbar'?
(a) திருநாவுக்கரசர்
(b) திருஞானசம்பந்தர்
(c) சுந்தரமூர்த்தி
(d) மாணிக்கவாசகர்

**Q26.** நவ இந்தியா பத்திரிகையில் துணை ஆசிரியராக பணியாற்றியவர் யார்?
Who worked as an assistant editor of Nava India Magazine?
(a) கு.ப.ராஜகோபாலன்
(b) நா.பிச்சமூர்த்தி
(c) புதமைப்பித்தன்
(d) வல்லிக்கண்ணன்

**Q27.** 2020 ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழ் நூல் எது?
Which Tamil book won the Sahitya Akademi Award for 2020?
(a) ஆறுமுகம்
(b) செல்லாத பணம்
(c) செடல்
(d) எங்கதெ

**Q28.** குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?
Who sang the Invocation to God song in Kurundhokai?
(a) பெருங்குன்றூர்க் கிழார்
(b) பொருத்தில் இளங்கீரனார்
(c) காக்கைப் பாடினியார்
(d) பாரதம் பாடிய பெருந்தேவனார்

**Q29.** எழுத்தாளர் ஜெயகாந்தன் 2002 ஆம் ஆண்டு பெற்ற உயரிய விருது எது?
Which is the highest award received by writer Jayakanthan in 2002?
(a) பத்ம விபூஷண்
(b) ஞானபீட விருது
(c) பத்ம ஸ்ரீ
(d) பத்ம பூஷண்

**Q30.** மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக பணியாற்றியவர் யார்?
Who served as the first Vice Chancellor of Kamarajar University, Madurai?
(a) திரு.வி.கல்யாணசுந்தரனார்
(b) சுவாமிநாத ஐயர்
(c) மு. வரதராசன்
(d) தெ. பொ. மீனாட்சிசுந்தரம்

## SOLUTIONS

**S1. Ans.(a)**

**Sol.** வைதோரைக் கூடவை யாதே -இந்த
வையக முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே
வெய்ய வினைகள்செய் யாதே -கல்லை
வீணில் பறவைகள் மீதிலெய் யாதே.
விளக்கவுரை:
நாம் யாரையும் பேசக்கூடாது.உலகமே பொய் கூறினாலும் நாம் பொய் சொல்லக்கூடாது.வீணாக பறவைகள் மீது கல்லெறியக்கூடாது என்பது **கடுவெளிச் சித்தரின்** பொன்மொழிகளில் ஒன்றாகும்.

**S2. Ans.(c)**

**Sol.** திருத்தக்கதேவர், தமிழ்க்கவிஞர்களின் இளவரசன் என்று ஜி.யு. போப்பால் அழைக்கப்பட்டார்.

**S3. Ans.(b)**

**Sol.** இது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளின் பொருட்பாலில், உழவு எனும் அதிகாரத்தின் கீழ் வரும் குறளாகும்.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.
விளக்கம்:
உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

**S4. Ans.(d)**

**S5. Ans.(a)**

**Sol.** ஜேக்கப் கிரிம் (Jakob Crimm, 1785-1863) என்னும் ஜெர்மன் மொழியியல் வல்லுநரும் அவர் சகோதரர் வில்ஹெல்ம் கார்ல்(Wilhelm Karl) என்பவரும் ஜெர்மன் மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். பேச்சு வழக்கில் அமைந்த நாட்டுப்புற இலக்கியங்கள் அவர்களைக் கவர்ந்தன. அவர்கள் நாட்டுப்புறக் கதைகளின் இரு தொகுதிகளை 1812 மற்றும் 1815 ஆண்டுகளில் வெளியிட்டனர்.



**S6. Ans.(b)**

**Sol.** கம்பர் இயற்றிய நூல்கள்:

- சிலையெழுபது
- சடகோபர் அந்தாதி
- சரசுவதி அந்தாதி
- திருக்கை வழக்கம்
- கம்பராமாயணம்
- ஏரெழுபது
- மும்மணிக்கோவை

**S7. Ans.(b)**

**Sol.**

- திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் சைவ நூல் பதினோராம் திருமுறைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள நூல்களில் ஒன்று.
- அந்தாதி என்பது ஒருவகைச் சிற்றிலக்கியம்.
- திருத்தொண்டர் திருவந்தாதி நூலின் ஆசிரியர் நம்பியாண்டார் நம்பி.
- காலம் பதினோராம் நூற்றாண்டின் முற்பாதி. இராசராச சோழன் காலம்.
- சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் அறுபத்துமூன்று நாயன்மார்களின் சைவத்தொண்டைப் போற்றிப் பாடுகிறது. திருத்தொண்டர் திருவந்தாதி அவர்களின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகிறது.

**S8. Ans.(d)**

**Sol.** நீதி இலக்கியம் அல்லது சங்க மருவிய கால இலக்கியம் என்பது சங்க காலத்திற்கு பின்னர் தமிழில் தோன்றிய இலக்கியங்களைக் குறிக்கும். கி.பி.3-ஆம் நூற்றாண்டு முதல் 6-ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதி நூல்கள் பல்கிப் பெருகின.

சங்க கால நீதி இலக்கியங்கள் - பதினெண் கீழ்க்கணக்கு

- திருக்குறள்
- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னா நாற்பது
- இனியவை நாற்பது
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- பழமொழி நானூறு
- சிறுபஞ்சமூலம்
- ஏலாதி
- முதுமொழிக்காஞ்சி

**S9. Ans.(a)**

**Sol.** சின்ன சீறா ஒரு இசுலாமியத் தமிழ்க் காப்பியம். இதனை இயற்றியவர் பனு அகுமது மரைக்காயர் ஆவார். இதில் நபிகள் நாயகத்தின் திருவாழ்வு முழுவதும் பாடப்பட்டுள்ளது. உமறுப் புலவர் இயற்றிய சீறாப்புராணத்தின் தொடர்ச்சியாகக் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட நூல் சின்ன சீறா.

**S10. Ans.(b)**

**Sol.** குமரகுருபரர் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருந் தமிழ்ப் புலவர் மற்றும் சைவ நெறியைப் போற்றிய தருமபுரம் ஆதீனத்துடன் தொடர்புடையவர் ஆவார்.

**எழுதிய நூல்கள்**

- கந்தர் கலிவெண்பா
- மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்
- மதுரைக் கலம்பகம்
- நீதிநெறி விளக்கம்
- திருவாரூர் நான்மணிமாலை
- முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
- சிதம்பர மும்மணிக்கோவை
- சிதம்பரச் செய்யுட்கோவை
- பண்டார மும்மணிக் கோவை
- காசிக் கலம்பகம்
- சகலகலாவல்லி மாலை
- மதுரை மீனாட்சியம்மை குறம்|மதுரை மீனாட்சி அம்மை குறம்
- மதுரை மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை
- தில்லைச் சிவகாமி அம்மை இரட்டை மணிமாலை
- கயிலைக் கலம்பகம்
- காசித் துண்டி விநாயகர் பதிகம்

**S11. Ans.(c)**

**Sol.** கவிஞரேறு வாணிதாசன் (சூலை 22 1915 - ஆகத்து 7, 1974) புதுவையைச் சேர்ந்த தமிழறிஞரும், கவிஞரும் ஆவார். இவர் 'பாரதிதாசன் பரம்பரை' என்றழைக்கப்படும், பாவலர் தலைமுறையில் வருபவர். இவர் தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த், கவிஞரேறு, பாவலர் மணி, புதுமைக் கவிஞர், தமிழ்நாட்டுத் தாகூர் என்றெல்லாம் போற்றப்பட்டார்.

**S12. Ans.(d)**

**Sol.** உ. வே. சாமிநாதையர் (பெப்ரவரி 19,1855 – ஏப்ரல் 28, 1942,) உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் மகன் சாமிநாதன் என்பதைச் சுருக்கமாக உ.வே.சா. என அழைக்கப்பட்டார். இவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினால் 'தமிழ்த் தாத்தா' எனத் தமிழர்களால் சிறப்பிக்கப்பட்டார். இவர் நாகப்பட்டினம் மாவட்டம் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற மகாவித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் 5 ஆண்டு காலம் பயின்று தமிழறிஞர் ஆனார்.

**S13. Ans.(c)**

**Sol.** மதுரையை “தமிழ்கெழு கூடல்” என்று புறநானூறு போற்றியது.

**S14. Ans.(c)**

**Sol.** மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவர். முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் பாடிய நூல்களாவன: திருவாசகமும் திருக்கோவையாருமாகும். இவர் 9-ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராகப் பணியாற்றினார்.

**S15. Ans.(b)**

**Sol.** மதுரை மீனாட்சி அம்மனைப் போற்றி மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் என்னும் நூலை குமரகுருபரர் இயற்றினார். ஒரு சமயம், இந்த நூலில் உள்ள "வருகைப்பருவம்" என்னும் பகுதியை கோவில் மேடையில் அமர்ந்தவாறு பாடிய போது மதுரை மீனாட்சி அம்மனே சிறு பெண் வடிவத்தில் வந்து குமரகுருபரருக்கு முத்து மாலை பரிசளித்ததாக வரலாறு உள்ளது.

**S16. Ans.(a)**

**Sol.** சீவக சிந்தாமணி என்பது சங்க காலத்துக்குப் பின்னர் தோன்றிய ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சோழர் காலத்தில் எழுதப்பட்டது. திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்ட இக் காப்பியம் சீவகன் என்பவனின் அக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. இவன் எட்டு மங்கையரை மணந்து கொள்கிறான். இதனால் இந்நூலுக்கு மணநூல் என்ற சிறப்புப்பெயரும் உண்டு.



**S17. Ans.(b)**

**Sol.**

- திராவிட வேதம் - திருவாய்மொழி
- சைவ வேதம் - திருவாசகம்
- தமிழ் வேதம் - திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தம்
- தமிழர் வேதம் - திருமந்திரம்
- வேளாண் வேதம் - நாலடியார்
- உத்தரவேதம் - திருக்குறள்
- கோதைத்தமிழ் – திருப்பாவை

**S18. Ans.(d)**

**S19. Ans.(d)**

**S20. Ans.(d)**

**Sol.** சுரதா (நவம்பர் 23, 1921 - சூன் 20, 2006) இயற்பெயர் இராசகோபாலன் தமிழகக் கவிஞரும் எழுத்தாளரும் ஆவார். 1969 இல் தேன்மழை என்ற சுரதாவின் கவிதை நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்தது.

**S21. Ans.(c)**

**Sol.** அ. வரதநஞ்சைய பிள்ளை (செப்டம்பர் 1, 1877 - ஜூலை 11, 1956) அப்பசாமிப் பிள்ளை, வரதாயி என்பார்க்கு மகனாகப் பிறந்தார். தமிழுடன் தெலுங்கையும் வடமொழியையும் நன்கு அறிந்தவர். விரைந்து கவிபாடுவதில் வல்லவர். கரந்தைச் தமிழ்ச் சங்கத்தில் 'ஆசிரியர்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவர். கற்றோரால் 'புலவரேறு' என்று சிறப்பிக்கப் பெற்றார்.

**S22. Ans.(b)**

**S23. Ans.(c)**

**Sol.** ஒகேனக்கல் அருவி, (Hogenakal Falls) இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் காவிரி ஆற்றில் அமைந்துள்ளது. தலைநீர் என்பது இந்த நீர்வீழ்ச்சியைக் குறிக்கும் சங்ககால வழக்கு. இதனைச் சூழ்ந்திருந்த நாடு தலைநீர் நாடு எனப்பட்டது. தகடூர் என்னும் தருமபுரியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி இதன் சங்ககால அரசன்.

**S24. Ans.(a)**

**Sol.** கிறித்துவக் கம்பர் என்றி ஆல்பிரட் கிருஷ்ணபிள்ளை (எச். ஏ. கிருஷ்ணபிள்ளை, ஏப்ரல் 23, 1827 - பெப்ரவரி 3, 1900) என்பவர் ஒரு கிருத்தவ தமிழறிஞர், புலவர், ஆசிரியிர் ஆவார். இவரைக் கிறித்துவக் கம்பர் எனப் புகழ்வர்.

**S25. Ans.(d)**

**Sol.** சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர். மதுரைக்கு அருகிலுள்ள திருவாதவூரில் பிறந்தவர். மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமையமைச்சராகப் பணியாற்றியவர். பாண்டியனுக்காக் குதிரை வாங்க சென்ற போது திருப்பெருந்துறை இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர். அவ்விறைவனை மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கி அழுது தொழுதவர். இதனால் மாணிக்கவாசகரை அழுது அடியடைந்த அன்பர் என்பர்.

**S26. Ans.(b)**

**Sol.** ந. பிச்சமூர்த்தி (ஆகத்து 15, 1900 - டிசம்பர் 4, 1976) அண்மைய தமிழ் இலக்கிய முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர். தமிழ்ப் புதுக்கவிதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் பிச்சமூர்த்தி. பிச்சமூர்த்தி, நவ இந்தியா பத்திரிகையில் சிறிது காலம் பணியில் இருந்தார்.

**S27. Ans.(b)**

**Sol.** இமையம் என்ற புனைபெயரில் எழுதும் வெ. அண்ணாமலை (பிறப்பு: மார்ச் 10, 1964) நன்கறியப்பட்ட தமிழக எழுத்தாளர். தனது முதல் புதினமான கோவேறு கழுதைகள் மூலம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமானார். இவர் எழுதிய செல்லாத பணம் என்ற புதினத்திற்கு 2020-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

**S28. Ans.(d)**

**Sol.** குறுந்தொகை எட்டுத்தொகையில் உள்ள நூல்களுள் ஒன்று. இந்நூல் எட்டுத்தொகை நூல்களைத் தொகுத்துச் சுட்டும் பழம்பாடலில் "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுகிறது. இதில் கடவுள் வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

**S29. Ans.(b)**

**Sol.** ஜெயகாந்தன் (ஏப்ரல் 24, 1934 - ஏப்ரல் 8, 2015) தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். இந்திய அரசின் இலக்கியத்திற்கான உயர்ந்த விருதான ஞான பீட விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர்.
இவர் பெற்ற விருதுகள்:

- சாகித்திய அகாதமி விருது
- 2002-ம் ஆண்டுக்கான ஞான பீட விருது
- 2009-ம் ஆண்டின் இலக்கியத்துறைக்கான பத்ம பூஷன் விருது
- ரஷ்ய விருது




**S30. Ans.(d)**

**Sol.** பன்மொழிப்புலவர் என்று அழைக்கப்பட்ட தெ. பொ. மீனாட்சிசுந்தரம் (08 சனவரி 1901 – 27 ஆகத்து 1980) 20-ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழறிஞர்களுள் ஒருவர். ஆரம்பத்தில் ஒரு வழக்கறிஞராகவும், சென்னை மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராகவும் பணியாற்றிய இவர், பிறகு மொழியியலில் ஆர்வம் கொண்டு பட்டங்கள் பெற்றுப் பல கல்லூரிகளில் பேராசிரியராகவும், பின்னர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் 1966 முதல் 1971 வரை பணியாற்றினார். தமிழக அரசின் கலைமாமணி விருதையும், இந்திய அரசின் பத்மபூசண் விருதையும் பெற்றவர்.















DOWNLOAD
Admit Card


வெற்றி வாராந்திர நடப்பு
நிகழ்வுகள் PDF தமிழில்
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


UPCOMING JOB
ALERT ARTICLE
IN TAMIL
for TNPSC Group 1, TNPSC Group 2/2A,
TNPSC Group 4, TNUSRB, TNFUSRC,
IBPS, SSC, IBPS RRB, SBI, RRB, UPSC etc.


TAMILNADU
STATE
GENERAL KNOWLEDGE
Q & A PDF
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்


ஆகஸ்ட் மாத பதிப்பு
வெற்றி ADDA247
தமிழ்நாடு மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு
பிரிவில் பயின்றிடுங்கள்
கிளிக் செய்க
தேர்ந்திடு வென்றிடு


ஆகஸ்ட் மாத பதிப்பு
வெற்றி ADDA247
மாதாந்திர நடப்பு
நிகழ்வுகள் Q & A தமிழில் 2021 PDF
TNPSC Group 1, TNPSC Group 2/2A, TNPSC Group 3 & 4,
TNUSRB, TNFUSRC, IBPS, SSC, IBPS RRB, SBI, RRB மேலும் பல
தமிழில் 270 முக்கிய
கேள்விகள்
PDF வடிவில்
பதில்களுடன்
போட்டித் தேர்வுக்கானது
Adda247 APPல் தமிழ்நாடு மாநில தேர்வு
பிரிவில் பயின்றிடுங்கள்
கிளிக் செய்க
தேர்ந்திடு வென்றிடு










**ADDA247 APP க்குச் செல்லுங்கள், தமிழ்நாடு மாநிலத் தேர்வு பிரிவில் பயிலுங்கள்.**

வெற்றிப்படி நமதே!!!